**தலைப்பு 287 – காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 287 – காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 14 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும், பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 423.01 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 416.24 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 6.77 மில்லியன் அதாவது 1.60 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 385.61 | 379.50 | 6.11 | 1.58 |
| மூலதனம் | 37.40 | 36.74 | 0.66 | 1.76 |
| மொத்தம் | **423.01** | **416.24** | **6.77** | **1.60** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 16.00 | 15.92 | 11.00 | 14.38 | 65.00 | 42.89 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 2 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.54 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0013/0087/000 | 0.29 |
| 6000/0000/00/0016/0080/000 | 0.25 |
| மொத்தம் | 0.54 |

### 2.4 கணக்காய்வு அவதானிப்பு

காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

05 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக அச் செலவின விடயங்களின் நிதியேற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாடுகளில் 17 சதவீதத்திலிருந்து 64 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தன.

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்றுக்கள்

28701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 1,080,684 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 1 ஆண்டிலிருந்து 9 ஆண்டுகள் வரையான காலவீச்சினைக் கொண்டிருந்தும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

### 3.3 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தினுள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 757(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஏனைய நிறுவனங்களுச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

காணி அமைச்சிற்குச் சொந்தமான 07 வாகனங்கள் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் 8 ஆண்டுகள் முதல் 13 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன.

**3.5 செயலாற்றல்**

2016 வருடாந்த பாதீடு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டதத்தின் பிரகாரம் காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்**

காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

(i) உரித்து பதிவுசெய்யும் செயற்பாட்டின் போது உருவாக்கப்பட்ட கோவைகள் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பான பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

- உரித்து பதிவுசெய்யும் செயற்பாட்டின் போது எழும் பல்வேறு சிக்கல்கள் காரணமாக செயற்பாடுகளின் வெவ்வேறு கட்டங்களின் போது அளவீ செய்யப்பட்ட காணித்துண்டுகளுக்குரிய கோவைகள் தற்காலிகமாக வைக்கப்பட்டிருந்தன. 2016 சனவரி மாதம் முதல் செப்தம்பர் மாதம் வரை 22,485 இற்குரிய கோவைகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த கோவைகளும் உட்பட 8331 கோவைகளுக்காக மாத்திரம் தீர்வு வழங்கி உரித்து பதிவுசெய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது.

- ஒதுக்கப்பட்ட காணித்துண்டுகள் தொடர்பாக முறையாக வருடாந்த தகவல் சேகரிப்பொன்று 2015 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது பிரதேச அலுவலகங்களிலிருந்து விசாரித்து முன்னைய 09 ஆண்டுகளுக்குரிய பழைய கோவைகள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட பட்டோலை தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை பல்வேறு சிக்கல்கள் காரணமாக ஒதுக்கப்பட்டிருந்த காணித்துண்டுகளின் எண்ணிக்கை 344,175 ஆக இருந்தது.

(ii) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

- 2007 ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டு நிதியத்தின் மூலம் அமுல்ப்படுத்தல்கள் ஆரம்பிக்கப்பட்ட பிம்சவிய நிகழ்ச்சித்திட்டங்கள் 15 ஆண்டுகளில் அதாவது 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டு வரையில் 10 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 1998 இன் 21 ஆம் இலக்க உரித்து பதிவுசெய்தல் அதிகாரச்சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் அறிவித்தல் பிரசித்தப்படுத்தப்பட்டு அளவீட்டு நடவடிக்கைகள் 3512 கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து 981 அதாவது 28 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

- பிம்சவிய நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதேச அலுவலகங்கள் ஊடாக செயற்படுத்தப்படுவதுடன் பிரதேச அலுவலகங்களின் கட்டிட வாடகை, எரிபொருள் மற்றும் வாகன பராமரிப்பிற்காக மாத்திரம் மீளாய்வாண்டின் போது ரூபா 27,936,868 தொகை செலவிடப்பட்டிருந்தது. அது பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவில் 31 சதவீதமாக இருந்தது. பிரதேச அலுவலகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவற்றின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

**(ஆ) திட்டமிடல்**

--------------------

**வருடாந்த செயல்நடவடிக்கைக் திட்டத்தில் குறைபாடுகள்**

----------------------------------------------------------------------------------------------------

செயல்திட்டத்திற்கு இணங்க பின்வரும் சந்தர்ப்பங்களின் போது செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) 2015 இன் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதனுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகள் பின்வருமாறு குறைவடைந்திருந்தன.

| செயற்பாடு | இலக்குகளின் குறைவு (காணித்துண்டுகள்) | சதவீதம் |
|---|---|---|
| --------- | ------------------- | ---------- |
| வெளிக்கள புலனாய்வுகளின் எண்ணிக்கை | 44,930 | 22 |
| காணிப் பதிவு பரிசோதனை எண்ணிக்கை | 30,000 | 22 |
| பரிந்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | 37,810 | 30 |
| தீர்மானம் பிரசித்தப்பட்ட எண்ணிக்கை | 40,000 | 32 |
| காணி ஆணையாளருக்கு அனுப்பியுள்ள எண்ணிக்கை | 54,000 | 44 |

2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக கருத்திற்கொள்ளும் போது 2016 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட இலக்குகள் குறைவடைந்திருந்த போதிலும் அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்காக திணைக்களம் தவறியிருந்தது.

(ii) 2016 ஆம் ஆண்டின் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் வருடாந்த செயன் முன்னேற்றம் பின்வருமாறு காணப்பட்டது.

| **செயற்பாடு** | **செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்குகள் (காணித் துண்டுகளின் எண்ணிக்கை)** | **2016.10.06 ஆம் திகதி திருத்திய இலக்குகள்** | **முன்னேற்றம் (காணித் துண்டுகளின் எண்ணிக்கை)** | **இலக்கின் பிரகாரம் செயன் முன்னேற்ற சதவீதம்** | **திருத்திய திட்டத்தின் பிரகாரம் செயற் பாடுகளை நிறைவேற்றுவ தன் சதவீதம்** |
|---|---|---|---|---|---|
| -------------- | ------------- | ------------ | ----------- | ----------- | ------------- |
| வெளிக்கள புலனாய்வுகளின் எண்ணிக்கை | 160,000 | 87,000 | 124,848 | 78.03 | 143.50 |
| காணிப் பதிவு பரிசோதனை எண்ணிக்கை | 105,000 | 57,000 | 51,106 | 48.67 | 89.66 |
| பரிந்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | 88,000 | 48,000 | 60,830 | 69.13 | 126.73 |
| தீர்மானம் பிரசித்தப்பட்ட எண்ணிக்கை | 85,000 | 47,000 | 59,880 | 70.45 | 127.40 |
| காணி பதிவாளருக்கு அனுப்பியுள்ள எண்ணிக்கை | 70,000 | 38,000 | 36,256 | 51.79 | 95.41 |

2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக இலக்குகள் குறைத்திருக்கும் போதும் செயன்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. இலக்குகளுடன் ஒப்பிடும் போது காணி பதிவாளருக்கு அனுப்பியுள்ள காணித்துண்டுகளின் எண்ணிக்கை 52 சதவீதமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் காணி பதிவாளருக்கு அனுப்பிய காணித்துண்டுகளின் எண்ணிக்கையான 53,584 உடன் ஒப்பிடும் போது 32 சதவீத குறைவொன்று இடம்பெற்றிருந்தது.

(iii) 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2015 நவம்பர் 01 அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த இலக்குகள் 46 சதவீதத்தினால் குறைத்து திருத்திய செயல்நடவடிக்கைத் திட்டம் 2016 ஒக்தோபர் 06 ஆந் திகதி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இங்கு திருத்தம் செய்யப்பட்ட திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்குரிய இலக்குகளும் திருத்தப்பட்டிருந்தன.

## 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்களாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கிழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனமொன்று ரூபா 232,000 ஆன மதிப்பீட்டின் பேரில் ஆகக்குறைந்த கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்த தனியார் கராஜ் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. திருத்த வேலைகள் முடிவடைந்தவுடன் மொத்தச் செலவினம் ரூபா 398,977 வரை ரூபா 166,077 ஆல் அதிகரித்திருந்ததுடன், அது ஏனைய கேள்விதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விப் பெறுமதியையும் மிகைத்து சென்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனமொன்றை பதிவுசெய்யப்பட்ட கராஜ் ஒன்றுக்கு ரூபா 369,341 இற்கு திருத்தக் கட்டணங்களின் பேரில் கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வண்டியின் மைலோமானி செயற்படாமல் இருந்ததுடன் கராஜிற்கு கையளிக்கும் போது அதன் இலக்கம் 129,919 கி.மீ ஆக இருந்ததுடன் மீள வாகனத்தை திணைக்களத்திற்கு கையளிக்கும் அவ்விலக்கம் 129,008 வரை 911 கி.மீ ஆல் குறைவடைந்திருந்தது.

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஹோமாகம பிரதேச அலுவலகத்தினை நடாத்திச் செல்லும் கட்டிடம் குறைபாடுகளுடன் கூடியதாக இருப்பதால் வேறொரு இடத்திற்கு கொண்டு செல்வது அவசர தேவைப்பாடாக கருதி கூறுவிலை கோராமல் அவ் அலுவலகத்தை புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள 5000 சதுர அடியுடன் கட்டிடத்தின் முதலாம் மாடிக்கு எடுத்துச் செல்வதற்கு காணி உரிமைகள் நிர்ணய ஆணையாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிக்கப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புதிய கட்டிடத்தின் முதலாம் மாடியில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தியடையாததன் காரணமாக 4000 சதுர அடியுடன் கூடிய கீழ்மாடியில் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அரசின் மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்த வாடகை ரூபா 70,000 ஆக இருந்தது. இதன் காரணமாக 2014 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2015 சனவரி 31 ஆந் திகதி வரை 06 மாத காலப்பகுதிக்காக குத்தகை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் 2015 சனவரி 26 ஆந் திகதி வரையிலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாததன் பேரில் 2015 யூலை 31 ஆந் திகதி வரை முன்னைய மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஆ) அலுவலகத்திற்காக பயன்படுத்தப்படும் காணியின் அளவு 2860 சதுர அடியாக இருந்த போதிலும், 4000 சதுர அடியான கட்டிடத்தை மதிப்பீடு செய்து ரூபா 70,000 மாதாந்த வாடகை ஆண்டு பூராகவும் செலுத்தியிருந்தமையால் பயன்படுத்தப்படாத இடப்பகுதிக்கும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 2015 மே மாதம் வரையான 10 மாத காலப்பகுதியில் 03 மாடிகளுக்குரிய மின்சாரக் கட்டணங்களும் திணைக்களத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) அலுவலகத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த முதலாவது மாடிக்கு செல்வதற்கு ஓராண்டு காலம் தாமதம் இடம்பெற்றிருந்ததுடன் ரூபா 65,000 மாதாந்த வாடகையின் பேரில் 2016 யூலை 31 ஆந் திகதி வரை ஓராண்டு காலப்பகுதிக்கு குத்தகை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இக்கட்டிடத்தின் குத்தகை மதிப்பீடான ரூபா 65,000 தொகை 2015 யூன் 15 ஆந் திகதி முதல் 02 ஆண்டுகளுக்கு செல்லுபடியாக இருந்த போதிலும், ஒப்பந்தக்காரரால் இரண்டாவது ஆண்டிற்காக மாதாந்த வாடகையை ரூபா 85,000 வரை அதிகரிக்குமாறு கோரிய வேண்டுகோள் மற்றும் உதவி ஆணையாளரால் (ஹோமாகம) நியாயப்படுத்தியதன் பேரில் மீண்டும் அரசின் மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அப்போது 2017 ஆம் ஆண்டிற்காக மாதாந்த வாடகை ரூபா 70,000 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.8 முகாமைத்துவ நலிவுகள்

குருவிட்ட பிரதேச அலுவலகத்திற்குரிய வாகனமொன்று ரூபா 866,651 ஆன மதிப்பீட்டின் பேரில் திருத்த வேலைகளுக்காக தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 45 நாட்களுடன் கூடிய காலப்பகுதியில் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்காக 11 மாதங்களுக்கு அண்மித்த காலப்பகுதிக்கு எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் திணைக்களத்தினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.9 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 107 | 46 | 61 |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 05 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 1747 | 620 | 1127 |
| (iv) | ஆரம்ப நிலை | 254 | 146 | 108 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | 126 | - | 126 |
| | மொத்தம் | **2,240** | **817** | **1,423** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தர் பதவி 2014 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக காணப்பட்டது.

(ஆ) 90 பிரதேச அலுவலகங்களுக்காக 186 தகவல் தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த 46 அலுவலகங்களுக்காகவும் உள்ளவாறான பதவியணியில் 06 பேர் மாத்திரம் இருப்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 91 ஆவணப் பாதுகாப்பு பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளவாறான பதவியணியில் ஒருவர் மாத்திரம் காணப்பட்டதுடன், 126 அலுவலக உதவியாளர்கள்

ஒப்பந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பாரியளவு கடமைப்பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள பிரதி மற்றும் உதவி ஆணையாளர் உத்தியோகத்தர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 80 ஆக இருந்ததுடன், உதவி உரித்து புலனாய்வு உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கை முறையே 421 மற்றும் 275 ஆக இருந்தன. இதன் பிரகாரம் பாரியளவிலான செலவினத்தை மேற்கொண்டு உப அலுவலகங்களை பேணிச்சென்றிருந்த போதிலும் செயலாற்றல் குறைவடைந்தமை தொடர்பில் பதவியணியில் வெற்றிடங்கள் நிலவியமை காரணங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.